**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.2/2021**

**2026 ஆம்** வருடம் ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியான பி.வா.சா.4-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வன் | ஜாதி | : | |
| த.பெ | : | ராஜு | தொழில் | : | வழக்கறிஞர் |
| கிராமம் | : | திண்டுக்கல் | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் | வயது | : | 66/2026 |
| தேதி | : | 27.04.2026 | | | |

**முதல் விசாரணை**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.16 உயில் ஆவணத்தில் உள்ள நோட்டரி பப்ளிக் கையெழுத்து என்னுடையது தான். உயில் ஆவணம் எழுதிக்கொடுத்தவுடன் போட்டோ மற்றும் ஆவணங்களை ஒட்டி கையொப்பம் செய்து கொடுக்கவில்லை. உயிலை எழுதிக்கொடுத்தவர் கைரேகை வைத்தார். மற்ற சாட்சிகள் என் முன்பாக கையொப்பம் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை மற்றும் அதில் உள்ள புகைப்படம் மரியபுஷ்பம் என்பவருடையது.

**11வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் எத்தனை வருடமாக வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் 1991 ல் இருந்து வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். 2011 ல் இருந்து நான் நோட்டரி பப்ளிக் பணி செய்து வருகிறேன். உங்கள் முன்பாக கையெழுத்திடப்படும் ஆவணங்கள் குறித்த விபரம் பற்றி நீங்கள் பராமரிப்பதற்கு தனியாக ஒரு பதிவு நோட்டு உள்ளது என்றால் சரிதான். நீங்கள் சொல்லும் உயில் ஆவணம் எந்த ஆண்டு பதியப்பட்டது என்றால் 2014 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. 2014 ம் ஆண்டிற்கான பதிவு நோட்டையும் நீங்கள் பராமரித்து வந்தீர்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு

ஆவணத்தையும் பதிவு செய்வதற்கு முன்பாக வரிசை எண் நீங்கள் கொடுப்பீர்கள் என்றால் சரிதான்.

நீங்கள் சாட்சியம் அளிக்க வந்துள்ள நிலையில் 2014 ஆம் ஆண்டில் நீங்கள் பராமரிப்பதாக சொல்லும் பதிவு நோட்டை நீங்கள் எடுத்து வரவில்லை என்றால் சரிதான். இந்த மேற்சொன்ன உயில் ஆவணத்திற்கு வரிசை எண் கொடுக்கப்படவில்லை மற்றும் நீங்கள் பராமரிப்பதாக சொல்லும் பதிவு நோட்டில் பதியவும் இல்லை என்றால் சரிதான். நீங்கள் நீதிமன்ற பணிகளை அதிகமாக செய்வதில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணத்தை பதிவு செய்தவற்கு எத்தனை வயது இருக்கும் என்றால் 78 வயது முதாட்டி ஆவார்.

எங்கு வைத்து இந்த ஆவணம் பதியப்பட்டது என்றால் திண்டுக்கல் பஸ்டாண்டு அருகில் பெரியசாமி வழக்கறிஞர் அலுவலகத்தில் இந்த ஆவணம் பதியப்பட்டது. இந்த ஆவணத்தை பதிவு செய்ய யார் அந்த முதாட்டியை அழைத்து வந்தது என்றால் 3, 4 நபர்கள் அழைத்து வந்தார்கள், யார் என்று தெரியவில்லை. நீங்கள் அந்த ஆவணத்தை பதிவு செய்யும் போது அந்த முதாட்டியுடன் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 3 பேர் இருந்தார்கள். எத்தனை பேர் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் வருடங்கள் ஆகிவிட்டதால் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். ஆவணத்தை நீங்கள் அந்த முதாட்டியிடம் படித்து காண்பித்தீர்களா என்றால் இல்லை. சாட்சிகளிடம் என்ன ஆவணம் என்று கூறினீர்களா என்றால் உயில் என்று அவர்களுக்கு தெரியும். அந்த ஆவணத்தில் உள்ள சரத்துக்கள் எதையும் நான் யாரிடமும் சொல்லவில்லை.

அந்த சாட்சிகள் யார், யார் என்று உங்களுக்கு தெரியுமா அல்லது கேட்டு தெரிந்துகொண்டீர்களா என்றால் எனக்கு தெரியாது என்று சாட்சி சாட்சியம் அளித்துவிட்டு பின்னிட்டு நியாபகமில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.16 ஆவணத்தில் உள்ள சாட்சிகளின் முகவரியை நீங்கள் எழுதினீர்களா என்றால் நான் எழுதவில்லை. திண்டுக்கல்லில் நீங்கள் எத்தனை

வருடங்களாக உள்ளீர்கள் என்றால் 1997 ஆம் ஆண்டில் இருந்து உள்ளேன். திண்டுக்கல் டவுனில் ஸ்டாம்பு விற்பனை செய்வர்கள் நிறைய பேர் உள்ளார்கள் என்றால் 3, 4 பேர்கள் இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். உயில் ஆவணத்தை பத்திரத்தில் தான் எழுத வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணம் பத்திரத்தில் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ.16 ஆவணத்தில் உள்ள முத்திரை தாள் எந்த ஊரில் வாங்கப்பட்டது என்றால் வேடசந்தூரில் வாங்கப்பட்டது. அந்த முத்திரை தாளில் செப்டம்பர் மாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மரியபுஷ்பம் எந்த ஊர் என்று தெரிந்துகொண்டீர்களா என்றால் வெள்ளோடு என்ற ஊரைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த முத்திரை தாள் பஞ்சம்பட்டி என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணத்தில் உள்ள கைரேகைக்கு அருகில் உள்ள எழுத்தை யார் எழுதினார் என்றால் நியாபகமில்லை. அதை நான் எழுதவில்லை. வா.சா.ஆ.16 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் சம்மந்தமான ஆவணங்களை எதையும் பார்த்தீர்களா என்றால் நான் ஆவணங்கள் எதையும் கேட்கவில்லை.

நீங்கள் சொல்லும் தேதியில், சொல்லும் இடத்தில் உயில் ஆவணத்தில் நீங்கள் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. மரியபுஷ்பம் உங்கள் முன்னிலையில் எப்பொழுதும் ஆஜராகி கைரேகை வைக்கவில்லை என்றும், அந்த கைரேகை மரியபுஷ்பத்தின் கைரேகை இல்லை என்றால் சரியல்ல. 15ம் பிரதிவாதி ஆலிஸ்மேரி ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஒரு போலியான உயில் ஆவணத்தில் நீங்கள் பின்னிட்டு கையொப்பம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor